செய்தி வெளியீடு எண்: 701 நாள்:09.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் கிராமம், மருதாநதி அணையிலிருந்து 120 நாட்களுக்கு 12.09.2021-லிருந்து முதல் 30 நாட்களுக்கு மறைமுக மற்றும் புதிய ஆயக்கட்டிற்கு நாள் ஒன்றுக்கு 70 கன அடியும், பழைய ஆயக்கட்டிற்கு நாள் ஒன்றுக்கு 20 கன அடியும் ஆக மொத்தம் நாளொன்றிற்கு 90 கன அடிக்கு மிகாமலும் மற்றும் மீதமுள்ள 90 நாட்களுக்கு பழைய ஆயக்கட்டிற்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 20 கன அடிக்கு மிகாமலும் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் 6583 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பொதுப்பணித்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9